நாள்.12.04.2023

**அசல் வழக்கு எண். 9/2018**

<u>வா.சா.1 - பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

நான் வழக்கு தாக்கல் செய்த சொத்து விபரத்தில் எதிர்வாதி செப்டிக்டேங் அமைக்க முயற்சி செய்வதாக சொல்லப்பட்டுள்ள பகுதியின் சர்வே எண்.317/6 ல் தான் அமைந்துள்ளது என்றால் சரியல்ல. மேற்படி சர்வே எண்.317/6 -னது பிரதிவாதிகள் குடும்பத்தின் பெயரில் பத்திரமும், பட்டாவும், அனுபவமும் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. எனது சொத்துவிபரத்தில் சர்வே எண்.316/1 என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி சர்வே எண்.316/1 ல் பிரதிவாதிகள் எந்த ஆக்கிரமிப்பும் செய்யவில்லை , செப்டிக்டேங் கட்டவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் வழக்கு தாக்கல் செய்த அன்றே நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை அளக்ககோரி மனு தாக்கல் செய்ததின் அடிப்படையில் தாவாசொத்தை நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி நீதிமன்ற ஆணையர் அறிக்கையின் மீது எனக்கு ஆட்சேபணை ஏதும் இல்லை என்றால் சரிதான். அதே நீதிமன்ற ஆணையரை பிரதிவாதிகள் தரப்பில் மீண்டு நியமனம் செய்து நில அளவையர் உதவியுடன் தாவா சொத்தை பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். ஆனார் நான் அந்த அறிக்கையை ஏற்றுக்கொள்ளவில்லை. நீதிமன்ற ஆணையர் இரண்டாவது முறையாக நிள அளவையர் உதவியுடன் பார்வையிட்டு தாக்கல் செய்த அறிக்கை மற்றும் வரைபடத்தில் சர்வே எண்.317/6 ல்தான் பிரதிவாதிகள் செப்டிக்டேங் அமைத்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல. தாவா சொத்து என் மனைவிக்கு எப்படி கிடைத்தது என்றால் எனது தாத்தாவான S.M.K.N.அபுல் கசன் மரைக்காயர் என்பவருக்கு சொந்தமான சொத்து. மேற்படி S.M.K.N.அபுல் கசன் மரைக்காயர் என்பவருக்கு சேக்ஜலாலுதின் மற்றும் பாத்திமா அம்மாள் ஆகியோர்கள் வாரிசுகள் ஆவார்கள். 1970 ல் சேக்ஜலாலுதின் மற்றும் பாத்திமா அம்மாள் ஆகியோர்கள் வாய்மொழியாக பாகம் பிரித்துக்கொண்டார்கள். பாத்திமா அம்மாள் மூலமாக எனது மனைவிக்கு கிடைத்தது. தாவா சொத்து ஆதியில் S.M.K.N.அபுல் கசன் மரைக்காயர் என்பவருக்கு சொத்து இல்லை என்றும், அவருடைய மகனான

S.M.S சேக்ஜலாலுதின் என்பவர் 1958 ல் கிரையம் வாங்கிய சொத்து என்று சொன்னால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் 13.06.1958 ல் S.M.K.N.அபுல் கசன் மரைக்காயர் என்பவரின் மகன் S.M.S சேக்ஜலாலுதின் என்பவர் தாவா சொத்தை கிரையம் பெற்றதற்கான கிரையம் பத்திரத்தின் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.1** ஆகும். வழக்கு சொத்தை பொறுத்து வழக்குரையில் சொல்லியுள்ள விபரங்கள் தெரியாது என்று சொன்னால் சரியல்ல.

**பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

*Taken down by the typist to my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him/her to be Correct.*

Sd/- M. Ravichandran,B.A.,B.L.,
District Munsif, Pattukkottai.